# KPR IAS Academy

Learn Beyond

**Institute for IAS, IPS, IFS and TNPSC Exams**


No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001


# குறைந்தபட்ச இருப்புக்கு அபராதம்

## ரூ.19 ஆயிரம் கோடி ஈட்டிய வங்கிகள்

கடந்த 2022-23 முதல் 2024-25 வரையிலான 3 நிதியாண்டுகளில் இந்தியாவில் உள்ள பொதுத் துறை மற்றும் தனியார் வங்கிகள் குறைந்தபட்ச இருப்பு வைக்கவில்லை எனக் கூறி வாடிக்கையாளரிடமிருந்து ரூ.19,093 கோடியை அபராதமாக வசூலித்துள்ளன. அதிகபட்சமாக ஹெச்டிஎப்சி பாங்க் ரூ.3,872 கோடி வசூலித்துள்ளது.

**அதிக அபராதம் வசூலித்த வங்கிகள் விவரம் ( ரூ. கோடியில்)**




(சேமிப்பு கணக்குக்கு எஸ்பிஐ அபராதம் விதிப்பதில்லை. நடப்பு கணக்குக்கு மட்டுமே வசூலிக்கிறது)

*ஆதாரம் : உறுப்பினர் கேள்விக்கு நாடாளுமன்றம் அளித்த பதில்.*

# திடீர் நிதி சிக்கல்களை சமாளிக்க பொருளாதார நிலைத்தன்மை நிதியம்





எஸ்.கல்யாணசுந்தரம்
ஓய்வு பெற்ற வங்கியாளர்
1953kalsu@gmail.com

அணு ஆயுதத்தை உற்பத்தி செய்வதாகக் கூறி, ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் போர் தொடுத்தன. இது மேற்கு ஆசியா முழுவதும் பரவி உள்ளது. இதனால் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்து முடங்கி உள்ளது. இதனால் உலகம் முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டு அதன் விலையும் வேகமாக உயர்ந்து வருகிறது.

இந் நிலையில், 'பொருளாதார நிலைப்படுத்தல் நிதியத்தை' (Economic Stabilisation Fund) மத்திய அரசு அறிமுகப் படுத்தி உள்ளது. கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் மற்றும் மேற்கு ஆசிய பிராந்தியத்தில் நிலவும் புவிசார் அரசியல் அபாயங்களிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதுதான் இதன் நோக்கம்.

இஎஸ்எப் (ESF) என்பது மத்திய அரசால் உருவாக்கப்படவுள்ள ஒரு சிறப்பு சேமிப்பு நிதியாகும். உலகளாவிய நெருக்கடிகள், விநியோக தடைகள், அல்லது திடீர் விலை உயர்வு போன்ற எதிர்பாராத பொருளாதார அதிர்வுகளை சமாளிக்க இது ஒரு நிதி பாதுகாப்பு வளையமாக (Financial Buffer) செயல்படும்.

- இந்த நிதியின் மொத்த அளவு ரூ.1 லட்சம் கோடி.
- ஆரம்பத்தில் ரூ.57,000 கோடி கூடுதல் பட்ஜெட்டின் மூலம் ஒதுக்கப்படும்.
- மீதமுள்ள தொகை அமைச்சகங்களின் சேமிப்பு மற்றும் மறுவழங்கல்களால் திரட்டப்படும்.
- இந்த நிதியை நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத் துறை (DEA) நிர்வகிக்கும்.

**நோக்கங்கள்**

இந்த நிதி கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது:

1. நிதி நெகிழ்வுத்தன்மை (Fiscal Flexibility)
   - அவசர சூழ்நிலைகளில் பட்ஜெட்டை பாதிக்காமல் அரசு விரைவாக செலவிட உதவும்.
2. வெளிப்புற அதிர்வுகளை சமாளித்தல்
   - உலக மோதல்கள்
   - எண்ணெய் விலை உயர்வு
   - விநியோக சங்கிலி சிக்கல்கள்
3. நிதி ஒழுங்கை பராமரித்தல்
   - அவசர காலங்களிலும் நிதிக் குறைவு இலக்குகளை பின்பற்ற உதவும்.
4. மேக்ரோ பொருளாதார நிலைத்தன்மை
   - நிலையான வளர்ச்சி மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையை உறுதி செய்யும்.

**இந்த நிதிக் கொள்கையின் தேவை**

சமீபகாலங்களில் உலகளவில் பொருளாதார அசாதாரண சம்பவங்கள் அதிகரித்துள்ளன. சமீபத்தில் ஏற்பட்டுள்ள மேற்காசியா மோதல்கள் போன்ற அரசியல் பதற்றங்கள், எரிசக்தி மற்றும் பொருள் விலை உயர்வுக்கு வழிவகுத்துள்ளன. மேலும் பொருள்களின் கொள்முதலிலும் விநியோகத்திலும் தடைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றுக்கு விரைவாக நிவாரணம் காணவில்லை எனில் பொருளாதார பாதிப்புகள் அதிகமாகும். இதற்கு விரைவாக தீர்வு காண அரசுக்கு போதிய நிதி பட்ஜெட்டிலிருந்து தேவைப்படுகிறது.

**முக்கிய அம்சங்கள்**

- இந்த நிதி பொருளாதாரத்துக்கு அவசர பாதுகாப்பு நிதியாக செயல்படும்.
- இது ஏற்கெனவே உள்ள Contingency Fund-ல் இருந்து தனித்துவமானது.
- 2025–26 நிதியாண்டின் கூடுதல் நிதி கோரிக்கைகள் வழியாக நிரப்பப்படும்.
- இந்த நிதியை உபயோகித்து அரசு அதிக கடன் எடுப்பதோ அல்லது நிதிக் குறைவை அதிகரிப்பதோ இல்லாமல் அரசு பங்களிப்பு செய்ய உதவும்.

**முக்கியத்துவம்**

இந்த நிதி வரும் காலங்களில்,

- பொருளாதார சக்தியை அதிகரிக்கும்.
- உலக நெருக்கடிகளின் தாக்கத்தை குறைக்கும்.
- நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும்.
- கொள்கை முடிவுகளை விரைவாக எடுக்க உதவும்.

**இது போதுமா?**

பின்வரும் கடந்த கால அனுபவங்களை பார்க்கும்போது இந்த நிதியின் அளவு சரியா என்ற வினா எழுகிறது.

- கரோனா பெருந்தொற்று காலத்தில் ரூ.20 லட்சம் கோடி அளவுக்கு உதவி அறிவிக்கப்பட்டது.
- 2008, மற்றும் 2022-ம் ஆண்டுகளில் உலக அளவிலான எண்ணெய் விலை உயர்வின் போது உள் நாட்டில் அதன் பாதிப்பு அதிகம் தெரியாமல் இருக்க பெரிய அளவில் சலுகைகள் வழங்கப்பட்டன.
- உலக நிதி நெருக்கடி காலங்களில் ரூ.1.8 லட்சம் கோடி ஊக்கத் திட்டம் பயன்படுத்தப்பட்டது.

மேலும் இப்போது முன்மொழியப்பட்ட ரூ.1 லட்சம் கோடி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 0.3–0.4 சதவீதம் மட்டுமே. பொதுவாக பெரிய நெருக்கடிகளின்போது ஜிடிபி-யில் ஒன்று முதல் மூன்று சதவீதம் வரை தேவைப்படும்.

ஆதலால்

- இது முழுமையான தீர்வு அல்ல.
- தற்காலிக உதவியாக மட்டுமே பயன்படும்.
- ஆனால் உடனடி நிதி மற்றும் கட்டுப்பாட்டை வழங்கும் ஒரு நல்ல தொடக்கம்.

இந்த நிலைத்தன்மை நிதி, அரசின் 'அவசர சேமிப்பு கணக்கு' போல செயல்படும். பெரிய பொருளாதார அதிர்வுகளை முழுமையாக சமாளிக்க இது போதுமானதாக இல்லாவிட்டாலும், இது ஒரு நல்ல ஆரம்ப முயற்சி. எதிர்காலத்தில் இதை மேலும் வலுப்படுத்தி பயனுள்ளதாக மாற்ற முடியும்.

க. ஆனந்தன்

பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரம், சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சிறப்பான கொள்கைகள் ஆகியவற்றின் மூலம், தொழில் வளர்ச்சியிலும் தனிநபர் முன்னேற்றத்திலும் ஒரு முன்னணி மாநிலமாக தமிழ்நாடு தன்னை நிலைநிறுத்தி உள்ளது. சமீபத்தில் தமிழ்நாடு அரசு வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கையின்படி, 2024-25-ம் ஆண்டில் மாநிலம் 11.2 சதவீத வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது. இந்தியாவின் முக்கியமான மாநிலங்களில் இதுவே மிகவும் அதிகமான வளர்ச்சியாகும். இது தமிழ்நாடு மாநிலத்தின் வளர்ச்சியைத் தெளிவாக காட்டுகிறது.

சிறந்த கல்வியறிவு, தொழில்நுட்பக் கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் சிறப்பான மனித வளத்தை தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளது. அத்துடன், அதிக உற்பத்தித் திறன் மற்றும் சிறந்த செயல்படுகளாலும் மாநிலம் பயனடைகிறது. இது உற்பத்தி மற்றும் சேவைத் துறைகள் ஆகிய இரண்டுக்கும் ஆதரவளிக்கக்கூடிய திறமையான பணியாளர்களை உறுதி செய்கிறது என்று அந்த ஆய்வறிக்கை மேலும் கூறுகிறது.

இந்த வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீபெரும்புதூரை விடச் சிறப்பாக வேறு எந்த ஊரையும் விளக்கி விட முடியாது. முக்கியமாக விவசாயத்தை மட்டுமே நம்பியிருந்த இந்தப் பகுதி, கடந்த 1990-ம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு கொரிய வாகன உற்பத்தி நிறுவனத்தின் வருகை காரணமாக உலகளாவிய உற்பத்தி வரைபடத்தில் முதன்முதலாக இடம் பிடித்தது. காலப்போக்கில், இங்கு தொழில் துறை விரிவடைந்தது. கடந்த 2007-ம் ஆண்டில் சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் சுங்குவார் சத்திரத்தில் தனது ஆலையை நிறுவ முடிவு செய்தது. அந்த முடிவு இப்பகுதியை ஒரு வாகன உற்பத்தி மையத்திலிருந்து ஒரு பெரிய மின்னணு சாதனங்கள் உற்பத்தி மையமாக மாற்றியது.

## சர்வதேச நிறுவனங்கள்

இன்று, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சாம்சங், பாக்ஸ்கான், ப்ளெக்ஸ், சால்ட் காம்ப் மற்றும் டெல் உள்ளிட்ட பல உலகளாவிய மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு உற்பத்தி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அத்துடன், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கான மொபைல் போன்கள், லேப்டாப்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களுக்கான உதிரிபாகங்களை வழங்கும் ஏராளமான நிறுவனங்களும் இங்கு செயல்படுகின்றன. இப்பகுதி 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி, ஒரு முக்கிய வேலைவாய்ப்பு மையமாக உருவெடுத்துள்ளது.

இதுகுறித்து மேன்பவர் குரூப் இந்தியா நிறுவனத்தைச் சேர்ந்த ஷைலேஷ் கண்ணா கூறும்போது, "வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு, திறன் மேம்பாடு, நியாயமான ஊதியம் மற்றும் பணியாளர்கள் மீதான அக்கறை ஆகியவை இணையும்போதுதான், உற்பத்தி சார்ந்த வளர்ச்சி மிகப் பெரிய அளவில் இருக்கும். சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் போன்ற நிறுவனங்களால் தொடர்ந்து செய்யப்படும் முதலீடுகள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி, மக்களின் வாழ்வாதாரத்தை முறைப்படுத்தி, வருமான அளவை உயர்த்தி உள்ளன. அத்துடன் பணியாளர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் மாற்றியமைக்கின்றன" என்றார்.

ஸ்ரீபெரும்புதூரில் ஏற்பட்ட தொழில்மயமாக்கல், மக்களின் குடும்ப வருமானம், தனித்திறன்கள் மற்றும் அவர்களின் எதிர்காலக் கனவுகளை மேம்படுத்தி மாற்றியமைத்துள்ளது. ஒரு காலத்தில் வேலை தேடி பல்வேறு இடங்களுக்குச் சென்ற இளைஞர்கள், இப்போது தங்கள் வீடுகளுக்கு அருகிலேயே பாதுகாப்பான மற்றும் முறையான வேலைகளைப் பெற முடிகிறது. பெரிய முதலீட்டு நிறுவனங்களோடு சேர்ந்து, போக்குவரத்து, வீட்டு வசதி, சில்லறை வர்த்தகம், உணவு சேவைகள் மற்றும் பயிற்சி நிலையங்கள் போன்ற சார்புத் தொழில்களும் இங்கு சிறந்த முறையில் வளர்ந்துள்ளன.

ஹூண்டாய் மற்றும் சாம்சங் போன்ற ஆரம்பகால நிறுவனங்கள், சிறந்த ஊதியம் மற்றும் தொழிலாளர் நலனுக்கான அளவுகோல்களை உருவாக்க உதவின என்று தொழில் துறை நிபுணர்கள் கூறுகின்றனர். கிளாஸ்டோர் மற்றும் ஆம்பிஷன் பாக்ஸ் போன்ற நிறுவனங்களை மதிப்பாய்வு செய்யும் தளங்களில், இப்பகுதியில் உள்ள பெரிய நிறுவனங்கள் முறையான ஊதிய உயர்வையும், வேலைவாய்ப்பு சலுகைகளையும் வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மிக முக்கியமான எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மையங்களில் ஒன்றாக இது உருவெடுத்துள்ள நிலையில், இத்தகைய நடைமுறைகள் தொழிலாளர்களின் நிலையான வேலைவாய்ப்புக்கு பெரும் பங்கு வகிக்கின்றன.

உலகளாவிய உற்பத்தி நிறுவனங்கள் இங்கு காலூன்றத் தொடங்கி கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஆகும் நிலையில், மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மாற்றத்தை நம்மால் காண முடிகிறது. இப்பகுதியில் இருந்த குடிசை வீடுகள் தற்போது கான்கிரீட் வீடுகளாக காட்சியளிக்கின்றன. கல்வியறிவு அதிகரித்துள்ளது. மக்களின் சேமிப்பும் சொத்துகளும் பெருகியுள்ளன. ஒரு காலத்தில் விவசாயம் மற்றும் தினக்கூலி வேலைகளை மட்டுமே நம்பியிருந்த ஒரு தலைமுறை, இப்போது முறையான உற்பத்தித் துறையிலும், உலகளாவிய வர்த்தகத்திலும் பங்கேற்று வருகிறது.

## வெளிநாட்டு முதலீடுகள்

இதுகுறித்து அனராக் பிராப்பர்ட்டி கன்சல்டன்ட்ஸ் நிறுவனத்தின் நகரத் தலைவர் மற்றும் இயக்குநர் சஞ்சய் சுக் கூறும்போது, "சென்னையில் நவீன தொழில் பூங்காக்களை உருவாக்குவதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகள் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. மேலும், புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு வரவும், தரமான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், உள்ளூர் நிறுவனங்கள் வளர்ந்து உலகளாவிய அளவில் போட்டியிடவும் இது உதவுகிறது" என்றார்.

தேசிய அளவில் தமிழ்நாட்டின் வளர்ச்சியானது மிகச் சிறப்பாக உள்ளது என்பது இதில் இருந்து தெளிவாகத் தெரிகிறது. 2030-ம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 150 பில்லியன் டாலர் (ரூ.13.8 லட்சம் கோடி) சந்தை மதிப்பிலான எலெக்ட்ரானிக்ஸ் மையமாக மாறவுள்ளது.

மேலும், ஆண்டுக்கு 12 முதல் 14 சதவீத வளர்ச்சி என்ற இலக்குடன் 2030-31-ம் ஆண்டுக்குள் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் (ரூ.92 லட்சம் கோடி) பொருளாதாரமாக மாறவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ஸ்ரீபெரும்புதூரின் இந்த வளர்ச்சிப் பயணம் நமக்கு முக்கியமான ஒன்றை உணர்த்துகிறது. அதாவது, தொழில் துறை முதலீடுகளைத் தொடர்ந்து ஈர்க்கும்போது, அது உள்ளூர் மக்களின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது என்பதைக் கூறுகிறது. எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தித் துறை இங்கு வெறும் தொழிற்சாலைகளை மட்டும் உருவாக்கவில்லை; அது இப்பகுதியின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையே மாற்றியமைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.

# 32 கோடி தொழிலாளர்களுக்கு காப்பீடு

தலிப் சிங்

மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், புதிய 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளின் (Labour Codes) வழிகாட்டுதலின்படி, குறைந்தது 32 கோடி அமைப்புசாரா, கிக் (Gig) மற்றும் பிளாட்பார்ம் தொழிலாளர்களுக்குக் காப்பீடு வழங்கி, அவர்களின் சமூக பாதுகாப்பை விரிவுபடுத்த ஆலோசித்து வருகிறது.

தொழிலாளர் நல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம் (ESIC), இதற்கான பொருத்தமான திட்டத்தை உருவாக்க உள்நாட்டு மற்றும் சர்வதேச மாதிரிகளை ஆய்வு செய்து வருவதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**பங்களிப்பு + அரசு மானியம் மாதிரி**

பொது நிதி ஆதாரங்கள் குறைவாக இருப்பதை ஈடுகட்ட, தொழிலாளர்களின் தன்னார்வ பங்களிப்பு மற்றும் அரசு மானியம் இணைந்த ஒரு மாதிரியை அமைச்சகம் ஆராய்ந்து வருகிறது. தற்போது அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு இது கட்டாயமில்லை. இத்திட்டம் அமலுக்கு வரும்போது, அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இணைவதால் காப்பீட்டு பிரீமியம் குறையும், இதனால் அவர்கள் எளிதாக இதில் சேர முடியும்.

இதுகுறித்து அமைச்சக அதிகாரிகள் கூறும்போது, "சமூக பாதுகாப்பு என்பது வரி மூலம் திரட்டப்படும் நிதியைக் கொண்டோ அல்லது பகுதியளவு வரி நிதியைக் கொண்டோ அமையலாம். ஆனால், அரசிடம் முழுமையாக நிதி இல்லாத நிலையில், வருவாயை எவ்வாறு பெருக்குவது என்பதே முக்கியமான சவால்" என்றனர்.

**தற்போதைய முக்கிய நலத்திட்டங்கள்**

இந்தியாவில் தற்போது கீழ்க்கண்ட சில நலத்திட்டங்கள் உள்ளன:

பிரதான் மந்திரி சுரக் ஷா பீமா யோஜனா (PMSBY): ஆண்டுக்கு ரூ.20 பிரீமியத்தில் ரூ.2 லட்சம் விபத்துக் காப்பீடு.

பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY): வங்கிக் கணக்கு வைத்திருப்போருக்கு ஆண்டுக்கு ரூ.436 பிரீமியத்தில் ரூ.2 லட்சம் ஆயுள் காப்பீடு.

ஆயுஷ்மான் பாரத் (PM-JAY): சுமார் 50 கோடி ஏழைகளுக்கு ரூ.5 லட்சம் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.

பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மாந்தன்: முதியோர் ஓய்வூதியத் திட்டம்.

இருப்பினும், அமைப்புசாரா மற்றும் கிக் தொழிலாளர்களுக்கு இதுவரை ஒருங்கிணைந்த காப்பீட்டு வசதி இல்லை.

அமைப்புசாரா துறையின் பரந்துபட்ட தன்மையும், அதன் சிக்கல்களும் ஒரு பெரிய சவாலாக உள்ளன.

இ-ஷ்ரம் (e-shram) இணையதளத்தில் 31 கோடி தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். (நிதி ஆயோக் கணிப்புப்படி இது 50 கோடி வரை இருக்கலாம்).

சுமார் ஒரு கோடி கிக் மற்றும் பிளாட்பார்ம் தொழிலாளர்கள் உள்ளனர்.

32 கோடி தொழிலாளர்களின் குடும்பங்களையும் (சராசரியாக 4 பேர்) கணக்கில் கொண்டால், சுமார் 128 கோடி மக்களுக்கு இத்திட்டம் சென்றடைய வேண்டும்.

**சமூக பாதுகாப்புச் சட்டம்**

சமூக பாதுகாப்பு சட்டம் 2020 பிரிவு 109-ன் படி, அமைப்புசாரா தொழிலாளர்களுக்காக ஆயுள் காப்பீடு, ஊனமுற்றோர் காப்பீடு, மகப்பேறு பலன்கள் மற்றும் முதியோர் பாதுகாப்பு போன்ற திட்டங்களை உருவாக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது. அதேபோல், வருங்கால வைப்பு நிதி (PF), வீட்டு வசதி மற்றும் கல்வி தொடர்பான விதிகளை உருவாக்க மாநில அரசுகள் அதிகாரம் பெற்றுள்ளன.



கிக் மற்றும் பிளாட்பார்ம் தொழிலாளர்கள், சமூக பாதுகாப்புச் சட்டம் 2020 பிரிவு 114-ன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இந்த திட்டங்களுக்கான நிதியை மத்திய அரசு, மாநில அரசு அல்லது இரண்டும் இணைந்து அல்லது நிறுவனங்களின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புணர்வு நிதி (CSR) மூலம் திரட்டவும் சட்டம் வகை செய்கிறது.

பல நாடுகள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அரசு நிதியுதவி, பங்களிப்பு அல்லது கலப்பு முறை மூலம் காப்பீடு வழங்குகின்றன. இதில் தாய்லாந்து நாட்டின் மாதிரி மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாக கருதப்படுகிறது.

**(கட்டுரையாளர்: பிஸினஸ்லைன் செய்தியாளர்)**

# இஸ்ரோவின் இளம் விஞ்ஞானி பயிற்சித் திட்டம்

## மார்ச் 31-க்குள் விண்ணப்பிக்க அறிவுறுத்தல்

**சென்னை**

இளம் விஞ்ஞானி பயிற்சி திட்டத்தில் பங்கேற்க விரும்பும் பள்ளி மாணவர்கள் மார்ச் 31-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

பள்ளி மாணவர்களிடம் விண்வெளி அறிவியல் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) 'யுவிகா' என்ற இளம் விஞ்ஞானி திட்டத்தை கடந்த 2019-ம் ஆண்டு அறிமுகம் செய்தது.

இந்த திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல் மற்றும் செய்முறை விளக்கப் பயிற்சிகளும் அளிக்கப்படும். இதற்காக நாடு முழுவதும் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் தலா 3 பேர் தேர்வு செய்யப்படுவார்கள்.

அதன்படி, இந்த ஆண்டுக்கான 'யுவிகா' பயிற்சி மே 11 முதல் 22-ம் தேதி வரை நடத்தப்படஉள்ளது. இதற்கான இணையதள விண்ணப்ப பதிவு கடந்த பிப். 7-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதற்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் மார்ச் 31-ம் தேதியுடன் முடிவடைகிறது.

எனவே, விருப்பம் உள்ளவர்கள் https://jigyasa.iirs.gov.in/yuvika என்ற இணையதளம் வழியே துரிதமாக விண்ணப்பிக்க வேண்டும். பள்ளியில் 9-ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பயிற்சிக்குத் தேர்வாகும் மாணவர்களின் தற்காலிக பட்டியல் ஏப்ரல் 13-ம் தேதி வெளியாகும். அந்த மாணவர்கள் தங்கள் சான்றிதழ்களை மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும்.

### 7 மையங்களில் பயிற்சி

அதன் பிறகு, சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு இறுதிப் பட்டியல் ஏப்ரல் 20-ல் வெளியிடப்படும். தேர்வாகும் மாணவர்களுக்கு திருவனந்தபுரம், ஸ்ரீஹரிகோட்டா உட்பட இஸ்ரோவின் 7 ஆய்வு மையங்களில் பயிற்சி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

---

வாக்குச்சாவடிகளில் முதல்முறையாக

# வாக்காளர்கள் செல்போனை வைக்க தனி அறை

## இந்தியத் தேர்தல் ஆணையம் ஏற்பாடு

**சென்னை**

சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச் சாவடிகளில் குடிநீர் உள்ளிட்ட குறைந்தபட்ச வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று 5 மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. வாக்குச் சாவடிக்கு வெளியே வாக்காளர்கள் செல்போனை பாதுகாப்பாக வைத்துவிட்டு செல்லவும் முதல்முறையாக வசதி செய்யப்பட உள்ளது.

இதுதொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் 6 மாநிலங்களில் இடைத் தேர்தல்களுக்கான அட்டவணை கடந்த மார்ச் 15-ம் தேதி அறிவிக்கப்பட்டது.

இத்தேர்தலையொட்டி, வாக்குச் சாவடிகளில் ஒவ்வொன்றிலும் உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் செய்யப்படுவதை உறுதி செய்ய மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகளான குடிநீர், நிழலுடன் கூடிய காத்திருப்புப் பகுதி, தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறை, போதிய வெளிச்சம், மாற்றுத் திறன் வாக்காளர்களுக்கான முறையான சாய்வுதளம், தரப்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு அறை மற்றும் முறையான வழிகாட்டி பலகைகள் ஆகியவை இடம்பெற வேண்டும்.

### வாக்காளர்கள் உட்கார பெஞ்ச்

வாக்காளர்கள் தங்களது முறைக்காக காத்திருக்கும் போது அமருவதற்கு ஏதுவாக, வரிசையில் குறிப்பிட்ட இடைவெளிகளில் பெஞ்சுகள் அமைக்கவும் தலைமைத் தேர்தல் அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

வாக்காளர் விழிப்புணர்வை வலுப்படுத்த, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் 4 சீரான மற்றும் தரப்படுத்தப்பட்ட வாக்காளர் வசதி சுவரொட்டிகள் முக்கியமாக காட்சிப்படுத்தப்படும்.

### சுவரொட்டியில் விவரங்கள்

இந்த சுவரொட்டியில் வாக்குச் சாவடி விவரங்கள், வேட்பாளர் பட்டியல், செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை, அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்களின் பட்டியல் மற்றும் வாக்குப் பதிவு நடைமுறை ஆகிய முக்கிய விவரங்கள் இடம்பெறும்.

வாக்காளர்கள் தங்களது வாக்குச் சாவடி எண் மற்றும் அந்தந்த சாவடியின் வாக்காளர் பட்டியலில் உள்ள வரிசை எண்ணைக் கண்டறிய உதவுவதற்காக, ஒவ்வொரு வாக்குச் சாவடி அமைவிடத்திலும் பிஎல்ஓக்கள், அதிகாரிகள் குழுவுடன் கூடிய வாக்காளர் உதவி மையங்கள் அமைக்கப்படும். வாக்காளர்கள் வாக்குச் சாவடி வளாகத்தை நெருங்கும் போது எளிதில் தெரியும் வகையில் இந்த உதவி மையங்கள் முக்கிய வழிகாட்டிப் பலகைகளைக் கொண்டிருக்கும்.

வாக்குச்சாவடி நுழைவு வாயிலுக்கு வெளியே வாக்காளர்களுக்கான செல்போன் வைப்பு அறை வசதி முதல்முறையாக அமைக்கப்பட உள்ளது. வாக்காளர்கள், வாக்குச் சாவடிக்குள் நுழைவதற்கு முன்பு தங்களது செல்போனை, நியமிக்கப்பட்ட தன்னார்வலரிடம் ஒப்படைத்துவிட்டு, வாக்களித்த பிறகு அதை பெற்றுக் கொள்ளலாம். இந்த பணிகளை தேர்தல் தேதிகளுக்கு முன்னதாகவே முடிக்குமாறு அனைத்து களப் பணியாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவர்களின் மனநலம் பாதுகாப்பு, தற்கொலை தடுப்புக்கு

# புதிய மனநலக் கொள்கையை வெளியிட்டது அரசு

## ஆலோசகர்கள் மூலம் தனித்திறனை ஊக்குவிக்க வலியுறுத்தல்

**சென்னை**

தமிழகத்தில் மாணவர்களின் மனநலம் பாதுகாப்பு, தற்கொலை தடுப்புக்கு புதிய கொள்கையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் மாணவர்களின் உளவியல் பாதிப்புகளுக்குத் தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் வினீத் தலைமையில் சிறப்பு குழு ஒன்றை தமிழக அரசு அமைத்தது. இதில் பள்ளிக் கல்வி, உயர்கல்வி, சட்டத் துறை, உள்துறை அதிகாரிகள், மனநல நிபுணர்கள் இடம்பெற்றிருந்தனர்.

கடந்த மாதம் இந்த குழு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில், சில வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய மனநலக் கொள்கையை அரசு வெளியிட்டுள்ளது. அதில், மாணவர்களின் மன அழுத்தத்தைக் கண்டறிந்து, அவர்களைப் பாதுகாக்கத் தேவையான வழிமுறைகள் இடம்பெற்றுள்ளன. உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை ஏற்று இதுதொடர்பான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள மனநலக் கொள்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

பள்ளி, கல்லூரிகளில் மனநல ஆலோசகர்கள், ஆலோசனை மையங்கள் மூலம் மாணவர்களின் தனித் திறனை ஊக்குவிப்பதுடன், நண்பர்கள் இடையே ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொள்ளும் நல்லாதரவு நடவடிக்கைகளை தொடங்க வேண்டும். இளைஞர் மன்றங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மனநல ஆலோசனைகள் தேவைப்படும் மாணவர்கள் '14416', '14417', '104', '1098', '181' ஆகிய உதவி எண்களை தொடர்பு கொள்ள ஊக்கப்படுத்த வேண்டும்.

தீவிர மனநல பாதிப்பு உள்ள மாணவர்களை அருகில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். தற்கொலை தடுப்பு நடவடிக்கைகளில் ஆசிரியர்கள், பெற்றோர், ஆலோசகர்கள், சக மாணவர்கள் என அனைவரது பங்களிப்பும் அவசியம் இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தேர்தல் பறக்கும் படை

# வாகனங்கள் ஜிபிஎஸ் கருவி மூலம் கண்காணிப்பு

**திண்டுக்கல்**

திண்டுக்கலில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து பறக்கும் படை வாகனங்கள் ஜிபிஎஸ். மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்கவும், தேர்தல் நடத்தை விதிகளை கண் காணிக்கவும் 24 பறக்கும் படைகள், 24 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவர்களை கண்காணிக்கவும், அறிவுறுத்தல் வழங்கவும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு உள்ளது. தினமும் தொலைபேசி வாயிலாகவும், சி-விஜில் செயலி வாயிலாகவும் கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் தகவல்கள் பறக்கும் படைக்கு தெரிவிக்கப்படுகிறது.

> தினமும் தொலைபேசி வாயிலாகவும், சி-விஜில் செயலி வாயிலாகவும் கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் தகவல்கள் பறக்கும்படைக்கு தெரிவிக்கப்படுகிறது.

பறக்கும் படையினர் அவ்விடத்துக்கு செல்வது ஜிபிஎஸ். கருவி மூலம் கண்காணிக்கப்படுகிறது. கட்டுப்பாட்டு அறைக்கு தினமும் வரும் புகார்கள், அதன்தன்மை, எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான அறிக்கை தினமும் தேர்தல் பொதுப்பார்வையாளருக்கு வழங்கப்படுவதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**39%**

இந்தியாவில் உள்ள மாற்றுத்திறனாளிகளில் 39% பேர் மட்டுமே மத்திய அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்த அடையாள அட்டையைப் (UDID) பெற்றுள்ளனர்.

# அரசுப் பதவியில் 8,931 நாட்களைக் கடந்தார்

## பவன் குமார் சாம்லிங் சாதனையை முறியடித்தார் பிரதமர் மோடி

**புதுடெல்லி**

பிரதமர் மோடி நேற்று அரசுப் பதவியில் 8,931 நாட்களைப் பூர்த்தி செய்து, இந்தியாவில் மிக நீண்ட காலம் தொடர்ந்து பதவியில் இருந்தவர் என்ற சாதனையைப் படைத்தார்.

இதற்கு முன்பு சிக்கிம் மாநில முதல்வராக 24 ஆண்டுகளுக்கும் மேலாக (8,930 நாட்கள்) பதவி வகித்த பவன் குமார் சாம்லிங்கின் சாதனையை பிரதமர் மோடி முறியடித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அக்டோபர் 7, 2001 முதல் மே 21, 2014 வரை தொடர்ந்து 13 ஆண்டுகளுக்கும் மேலாக குஜராத் முதல்வராகப் பணியாற்றினார். பின்னர் 2014 மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டு வென்ற அவர், நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்றார். பின்னர், 2019 மற்றும் 2024 மக்களவைத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று தற்போது மூன்றாவது முறையாகப் பிரதமராக நீடிக்கிறார்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "பிரதமர் நரேந்திர மோடி இப்போது இந்தியாவில் மிக நீண்ட காலம் அரசுத் தலைவராக இருந்தவர் என்ற பெருமையைப் பெறுகிறார். நாட்டின் மீதும் மக்கள் மீதும் கொண்டுள்ள தூய பக்தியே பிரதமர் மோடியை வரையறுக்கிறது. குஜராத் முதல்வராக அவர் காட்டிய உறுதி முதல், பிரதமராக அவர் வழங்கும் அர்ப்பணிப்புள்ள தலைமை வரை, அவரது வாழ்க்கை ஒரு தொடர்ச்சியான சேவைப் பயணமாகும்" என கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், "சேவை, கடின உழைப்பு மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பில் உருவான மைல்கல் இது. இன்று பிரதமர் நரேந்திர மோடி, சிக்கிம் முன்னாள் முதல்வர் பவன் குமார் சாம்லிங்கின் 8,930 நாட்கள் சாதனையை முறியடித்து, இந்தியாவின் நீண்டகால அரசுத் தலைவராகியுள்ளார்.

முதலில் குஜராத் முதல்வர், தற்போது பிரதமர் என 8,931 நாட்கள் பொதுவாழ்வில் அவர் இருப்பது, 'தேசமே முதல்' என்ற கொள்கைக்கும், நேர்மையான செயல்பாட்டுக்கும், அயராத மக்கள் சேவைக்கும் சான்றாகும்" என கூறியுள்ளார்.

### இன்ஸ்டாவில் 10 கோடி

இந்தமைல்கல்சாதனையைத் தவிர, பிரதமர் மோடியின் உலகளாவிய டிஜிட்டல் செல்வாக்கும் அதிகரித்து வருகிறது. இன்ஸ்டாகிராமில் 10 கோடி பின்தொடர்பாளர்களைக் கடந்த முதல் உலகத் தலைவர் என்ற பெருமையை அவர் சமீபத்தில் பெற்றார். இது அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் (4.3 கோடி) பின்தொடர்பாளர்களைவிட 2 மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**இஸ்ரேல் அணுசக்தி ஆராய்ச்சி மையம் அருகே**

# ஈரான் ஏவுகணைத் தாக்குதலில் 160-க்கும் மேற்பட்டோர் காயம்

**டெல் அவிவ்**

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் 4-வது வாரத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், இஸ்ரேலின் தெற்குப் பகுதியில் உள்ள டிமோனா நகரில் பெரிய அளவிலான நெருப்புக் கோளங்கள் விழுந்து வெடிக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன. அணுசக்தி மையம் அமைந்துள்ள இந்தப் பகுதியில், முதல் முறையாக இஸ்ரேலின் வான் பாதுகாப்பு அமைப்புகளை மீறி ஈரானிய ஏவுகணைகள் ஊடுருவித் தாக்கியுள்ளன.

ஈரானின் பழைய ஏவுகணைகளிடமிருந்து அணுசக்தி நகரைக் காக்கத் தவறியதை இஸ்ரேலிய ராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது.



ஈரான் நடத்திய ஏவுகணை தாக்குதலில் இஸ்ரேலின் டிமோனா நகரில் உள்ள ஒரு கட்டிடத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்ட வீரர்கள். படம்: பிடிஐ

ஈரானின் பிரதான அணுசக்தி செறிவூட்டல் தளமான நடான்ஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்ட அதே நாளில், அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இஸ்ரேலின் தெற்கு நகரங்களான டிமோனா மற்றும் ஆராத் பகுதிகளில் ஈரான் நடத்திய தாக்குதலில் 160-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர். குறைந்தது 2 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைத் தடுக்க இஸ்ரேலிய வான் பாதுகாப்புத் துறை தவறியுள்ளது. அணுசக்தி மையத்துக்கு அருகிலுள்ள வான் பாதுகாப்பை ஈரானிய ஏவுகணைகள் ஊடுருவிய முதல் சம்பவம் இதுவாகும். சமூக வலைதளங்களில் பகிரப்பட்ட வீடியோக்களில், ஏவுகணைகள் இஸ்ரேலிய இலக்குகளைத் தாக்கும்போது பெரிய அளவிலான வெடிப்புகள் ஏற்படுவது பதிவாகியுள்ளது.

# பொதுநல வழக்குகள்: வரமே சுமை ஆகலாமா?

உச்ச நீதிமன்றத்தில் 3,525 பொதுநல வழக்குகள் நிலுவையில் இருப்பதாக மக்களவையில் மத்திய சட்டத் துறை அமைச்சகம் அண்மையில் தெரிவித்துள்ளது. இவற்றில் சில வழக்குகள் 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்ப்புக்காகக் காத்திருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தில் ஏறக்குறைய 80,000 வழக்குகள் காத்திருப்பில் உள்ள நிலையில், நீண்ட காலமாகத் தீர்வு காணப்படாத பொதுநல வழக்குகள் கூடுதல் சுமை ஆகின்றன.

தங்கள் பிரச்சினைகளுக்காக நீதிமன்றத்தை அணுகும் சூழலோ, விழிப்புணர்வோ இல்லாத தரப்பினருக்காக இன்னொருவர் பொதுநல வழக்கு (Public Interest Litigation-PIL) தொடுக்கும் வழிமுறையை வி.ஆர்.கிருஷ்ண ஐயர், பி.என்.பகவதி உள்ளிட்ட உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் முன்மொழிந்தனர் எனலாம். நாட்டின் முதல் பொதுநல வழக்கான 'ஹுசைனாரா காட்டூன் எதிர் பிஹார் மாநில அரசு' (1979) மூலம் சிறையில் மிக மோசமாக நடத்தப்பட்ட பல விசாரணைக் கைதிகளுக்கு நிவாரணம் கிடைத்தது. கொத்தடிமைத் தொழிலாளர்கள், அரசுக் காப்பகங்களில் வசிப்போர், நடைபாதைவாசிகள் உள்ளிட்ட பல பிரிவினருக்குப் பொதுநல வழக்குகள் மூலம் நீதி கிடைத்துள்ளது. மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் சக்தி வாய்ந்த ஆயுதமாகக் கருதப்படும் இந்த வழக்குகள், காலப்போக்கில் எண்ணிக்கையில் மிகுந்து பணிச்சுமையாகிவிட்டன.

உச்ச நீதிமன்றத்தில் 3,525 பொதுநல வழக்குகள் நிலுவையில் உள்ளதாக அண்மையில் மக்களவையில் சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் சுட்டிக்காட்டினார். இவற்றில் 698 வழக்குகள் தீர்ப்பு அளிக்கப்பட வேண்டிய நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் காத்திருக்கின்றன. 2025இல் உச்ச நீதிமன்றத்தில் 570 பொதுநல வழக்குகள் அனுமதிக்கப்பட்டன. இது முந்தைய சில ஆண்டுகளைவிட அதிகம்.

நிலுவையில் உள்ளவற்றில் பெரும்பாலானவை சுற்றுச்சூழல், நில உரிமை சார்ந்த பிரச்சினைகள் தொடர்பானவை. 'எம்.சி.மேத்தா எதிர் மத்திய அரசு' என்கிற வழக்கானது, 1986லிருந்து தீர்வுக்காகக் காத்திருக்கிறது. இது டெல்லியில் உள்ள ஒரு தனியார் காஸ்டிக் குளோரின் உற்பத்தி நிலையத்தை மூட வலியுறுத்தும் முக்கியமான வழக்கு. மக்கள் நெருக்கம் மிகுந்த இடத்தில் செயல்படும் அந்த ஆலையில் ஏற்பட்ட இரண்டு கசிவு சம்பவங்களை அடுத்து, 'பசுமை வழக்கறிஞர்' என அறியப்படும் எம்.சி.மேத்தா இந்த வழக்கைத் தொடுத்தார். சில மருந்து தயாரிப்பாளர்கள், உணவகம், கட்டுமான நிறுவன உரிமையாளர்கள் போன்றவர்களோடு, இந்தியத் தொல்லியல் துறை உள்ளிட்ட அரசு நிறுவனங்கள் தொடுத்த வழக்குகளும் நெடுங்காலக் காத்திருப்பில் உள்ளன. உயர் நீதிமன்றங்களில் குவிந்துள்ள பொதுநல வழக்குகளின் எண்ணிக்கையும் கவலை அளிக்கக்கூடியதாகவே உள்ளது.

ஆள்கொணர் ஆணை (Habeas Corpus) போன்ற நோக்கங்களுக்காக நீதிமன்றத்தின் எழுத்துபூர்வமான உத்தரவுகளைக் கோரும் ரிட் மனுக்களைவிட, மக்களே அனுப்புகிற கடித மனுக்கள் பொதுநல வழக்குகளில் அதிகம். நீதிமன்றங்களுக்கு எவ்வளவோ நிர்வாகத் தடைகள் உள்ளன. வழக்குகள் விரைவாக நடத்தி முடிக்கப்படுவதில் மத்திய, மாநில அரசுகளின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. வழக்குத் தொடுப்பவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. தனிப்பட்ட ஆதாயம், விளம்பரம், ஆட்சியாளர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ நெருக்கடி கொடுப்பது போன்ற நோக்கங்கள் பல வழக்குகளில் தென்படுவதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. தவறான வழக்குகளைத் தொடக்கத்திலேயே அடையாளம் கண்டு விலக்குவதும் இந்தச் சுமையைக் குறைக்கும்.

நீதிமன்றத்தின் ஒவ்வொரு மணித்துளியும் மருத்துவத் துறையில் வலியுறுத்தப்படும் 'பொன்னான நேர'த்துக்கு ஈடானதுதான். அனைத்துத் தரப்புகளும் அதன் மதிப்பை உணர்வதுதான் தீர்வுக்கான முதல் படி.